# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2018

நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
வித்யா மாவத்தை , கொழும்பு 07

அனர்த்த முகாமைத்துவத்யதுவ அமைச்சின் 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை நிதித் சுற்றறிக்கை இல - 402 ன் மூலம் வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக்கமைய தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் பகுதி 1 இல் பொதுவான தகவல் ஒட்டுமொத்த நிதித்திறன் மற்றும் 2018 தை மாதம் முதல் மார்கழி மாதம் வரையான காலப்பகுதி அமைச்சின் நடவடிக்கை பற்றி விவரிக்கிறது.

அறிக்கை 11

2018 ல் தேசிய அனர்த்த நிவாரண சேவை மையத்தின் மேற்பார்வையின் கீழான நடவடிக்கைகளையும் செயல்திறன்களையும் விவரிக்கின்றது.

## அறிமுகம்

இலங்கைவாழ் மக்கள் முன்னொருபோதும் சந்தித்திராத நிகழ்வாக, 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவினால் முப்பத்தைந்தாயிரத்திற்கும் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்டமை, அனர்த்த முகாமைத்துவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறுவதற்கு காரணமாயிற்று. இப்பேரழிவினால் 05 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் உள்நாட்டில் இடம் பெயரவேண்டிய நிலை உருவானது.

இவ்வாறான உயிர்ச்சேதங்கள், பொருளாதாரப் பின்னடைவு மற்றும் சமூகத்திற்கு அதனாலான தாக்கம் தொடர்பில் நலனோம்புகைப் பணியாக மேற்கொள்ளப்பட்டு வந்த அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பிற்கு உரிய முறைவழி மற்றும் சட்டரீதியான ஒரு கட்டமைப்பின் தேவை உணரப்பட்டது. எனவே, இதுபோன்ற அனர்த்தங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தேவையான நிறுவன மற்றும் சட்டரீதியான கட்டமைப்பினை நிறுவுவதற்காக பாராளுமன்றத் தெரி குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த தெரி குழுவின் சிபாரிசுகளின்படி 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையும், அனர்த்த முனாமைத்துவ நிலையமும் தாபிக்கப்பெற்றன. இந்த நிறுவனங்களை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் தாபிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சானது, 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிய விசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு எனப் பெயரிடப்பட்டு தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் அதன் கீழ் கொண்டுவரப்பட்டது. மீண்டும் அது 2018.05.21 திகதி எண் 2069/17 விசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் நீர்ப்பாசன நீர்வழி மற்றும் அனர்த்த முகாமைத்துவச என பெயரிடப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவத்தில் அமைச்சுக்குக் கீழ் காணப்படும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம், வளி மண்டளவியல் திணைக்களம், தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம், மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பவற்றின் மூலம் அமைச்சினால் செயல்படுத்தப்படும் நடவடிக்கைகளினால் பேரழிவு மற்றும் பேரழிவுக்கு முன் பாரிய சேவை மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் அனர்த்தங்களின் போது மனித உயிர்கள், உடமைகள் மற்றும் சேவைகளை பாதுகாத்தல், பாதுகாக்கப்பட்ட எதிர்கால சமூகத்தை உருவாக்கல் மற்றும் அனர்த்தக் குறைப்பு வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

## நோக்கு

"பாதுகாப்பானதோர் இலங்கை"

# இலட்சியப் பணி

"இலங்கையில் இயற்கையாக அல்லது மனிதனின் செயற்பாடுகள் காரணமாக நிகழும் அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய பிரதிகூலமான தாக்கங்களை பயன்தரும் வகையில் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதன் மூலம் சுபிட்சமானதும் உன்னதமானதுமான வாழ்க்கை முறையை உறுதி செய்தல்".

## குறிக்கோள்கள்

- ✓ தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கையை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்
- ✓ முன்னெச்சரிக்கை மற்றும் பரப்புவதற்கான பொறிமுறையை செயற்படுத்தல்
- ✓ எல்லா மட்டங்களிலும் அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயாரித்தலும் செயற்படுத்தலும்
- ✓ அபிவிருத்தி திட்டங்களில் அனர்த்த அபாய தணிப்பு நடைமுறையை பின்பற்றல்
- ✓ அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் அனர்த்த பாதிப்பு மதிப்பிடலை பின்பற்றல்
- ✓ அனர்த்த அபாய தணிப்பு வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்
- ✓ மண்சரிவு அபாய மதிப்பீடுகளையும் தடைநீக்கலையும் வழங்குதல்
- ✓ அனர்த்ங்களுக்கு தாக்குப்பிடிக்கும் மாதிரி வீட்டு அலகுகள் மற்றும் வழிகாட்டிகளை தயாரித்தல்
- ✓ அனர்த்தத்தினால் பாதிக்கப்படுவோருக்காக நிவாரணம் வழங்கல்
- ✓ அனர்த்த முகாமைத்துவ ஆய்வு மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நிகழ்த்துதல்
- ✓ அனர்த்தத்துக்கு பின்னரான புனருத்தாபனம் மற்றும் புனர்நிர்மானம

# பணிகள்

இந்த குறிக்கோள்களை அடைவதற்காக 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் அமைச்சிடம் கீழ் வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- அனர்த்த முகாமைத்துவ விடயம் மற்றும் அதனுடன் தொடர்பான திணைக்களங்கள் மற்றும் நியதிச்சபைகளின் விடயங்களுடன் தொடர்பான கொள்கைத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களை தயாரித்தல், மிள் நோக்குகை மற்றும் மதிப்பீடு.
- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனித செயற்பாடுகளினால் ஆபத்துக்களை தளர்த்தல், பதில் நடவடிக்கைகள், நிவாரணங்களை வழங்குதல் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் அவற்றை முகாமைத்துவம் செய்தல்.
- தேசிய திட்டமிடலின் அடிப்படையில் தேசிய அனர்த்த முகாமைத்துவத்திட்டம் மற்றும் தேசிய அவசரகால கருமமாற்றல் திட்டத்தை தயாரித்தல்
- அனர்த்தங்களை தளர்த்தல், பதில் நடவடிக்கைகள், மீள கட்டியெழுப்புதல் தொடர்பாக வெளிநாட்டு உதவித்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் அவற்றை ஒருங்கிணைத்தல்.
- மேற்கூறிய பணிகள் உரிய நேரத்தில் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக அமைச்சுக்கள், அரச நிறவனங்கள், முகவர் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல்.
- மேற்கூறிய பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், முகவர் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல்.
- த்துக்களை எதிர் கொள்ளக்கூய தொழில்நுட்ப தரத்திலான வீடுகள் அமைக்கப்படுதலை ஊக்குவித்தல்.
- வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை ஆகிய பிரிவுகளுக்கு பொருத்தமான தொழில்நுட்பம் தொடர்பான அராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை ஊக்குவித்தல்.
- காலநிலை தொடர்பான விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிகளையும் ஆய்வுகளையும் மேற்கொள்ளல்.
- இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான மதிப்பீடும் அது தொடர்பாக ஏனைய நிறுவனங்களுக்கு அறிவித்தலும்.
- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- சர்வதேச மனிதாபிமான நிவாரண சேவைகள் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல

பகுதி 1


01 நிருவாக நடவடிக்கைகள் 01-05

02 திட்டமிடலும் அபிவிருத்திப் பணிகளும 05- 12

03 கணக்கீட்டு நடவடிக்கைகள் 13 -14

04 பெறுகைகள் கோரல / உள்ளக கணக்காய்வு 15 -18


பகுதி II


தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் 19 - 40


செயலாளர்
மேலதிக செயலாளர் (நிதி மற்றும் நிர்வாகம்)
மேலதிக செயலாளர் (அபிவிருத்தி மற்றும் அனர்த்த நிவாரன சேவைகள்)
பிரதான நிதி உத்தியோகத்கர்
பணிப்பாளர் (முகாமைத்துவம்)
சிரேஷ்ட உதவி செயலாளர் (நிர்வாகம் )
பணிப்பாளர் (திட்டமிடல்
பணிப்பாளர் (அனர்த்த நிவாரன
பிரதாண கணக்காளர்
உள்ளகக் கணக்காய்வாளர்
உதவிப் பணிப்பாளர் (முகாமைத்துவம்)
சட்ட உத்தி
உதவி செயலாள
உதவி செயலாள
உதவி பணிப்பாளர் (திட்டமிடல்
துனை பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் (அனர்த்த நிவாரன
கணக்காளர்
மொழிபெயர்ப்பாளர்
நிர்வாக உத்தியோகத்தர்
தகவல் தொடர்பாடல் உத்தியோகத்தர்
துனை ஊழியர்கள்
துனை ஊழியர்கள்
துனை ஊழியர்கள்
துனை ஊழியர்கள்
துனை ஊழியர்கள்
துனை ஊழியர்கள்

- **நிருவாக நடவடிக்கைகள்**

| இலக்கம் | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பணியாட் குழுவினர் | மெய் பணியாட் குழுவினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | செயலாளர் | 01 | 01 | 00 |
| 02 | மேலதிக செயலாளர் | 02 | 02 | 00 |
| 03 | தலைமை நிதி உத்தியோகத்தர் | 01 | 01 | 00 |
| 04 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 01 | 01 | 00 |
| 05 | தலைமை கணக்காளர் | 01 | 01 | 00 |
| 06 | பணிப்பாளர் ( முகாமைத்துவம்) | 01 | 01 | 00 |
| 07 | பணிப்பாளர் ( திட்டமிடல்) | 01 | 01 | 00 |
| 08 | உதவிச் செயலாளர் | 02 | 01 | 01 |
| 09 | உதவிப் பணிப்பாளர் ( திட்டமிடல்) | 01 | 01 | 00 |
| 10 | உதவிச் செயலாளர் ( முகாமைத்துவம்) | 01 | 01 | 00 |
| 11 | பிரதிப் பணிப்பாளர் | 01 | 00 | 01 |
| 12 | தலைமை உள்ளக கணக்காளர் | 01 | 01 | 00 |
| 13 | சட்ட உத்தியோகத்தர் | 01 | 01 | 00 |
| 14 | நிருவாக உத்தியோகத்தர் | 01 | 01 | 00 |
| 15 | செயலாளரது ஒருங்கிணைப்பு செயலாளர் ( தற்காலிக) | 01 | 00 | 01 |
| 16 | மொழிபெயர்ப்பாளர் | 02 | 01 | 01 |
| 17 | புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் | 01 | 01 | 00 |
| 18 | தகவல் தொழிநுட்ப மற்றும் தொடர்பாடல் உத்தியோகத்தர் | 01 | 01 | 00 |
| 19 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 39 | 22 | 17 |
| 20 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 20 | 18 | 02 |
| 21 | தொழிநுட்ப உத்தியோகத்தர் | 01 | 01 | 00 |
| 22 | தகவல் தொழிநுட்ப மற்றும் தொடர்பாடல் உதவியாளர் | 01 | 01 | 00 |
| 23 | கெமரா இயக்குநர் ( உதவி) | 01 | 01 | 00 |
| 24 | சாரதி | 15 | 11 | 04 |
| 25 | அலுவலக ஊழியர் | 15 | 14 | 01 |

**1.1 இடமாற்றல் / ஓய்வு பெறுதல்**

2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அந்த ஆண்டின் டிசம்பர் மாதம் வரையில் அமைச்சின் 12 ஊழியர்கள் வேறு பணி நிலையங்களுக்கு மாற்றப் பெற்றுச் சென்றுள்ளதுடன், இடமாற்றல் பெற்று அமைச்சுக்கு வருகை தந்துள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 04 ஆகும். அரச முகாமைத்துவ உதவியாளர் புதிய பதவிகளைப் பெற்று வந்துள்ளவர்களின் எண்ணிக்கையை 7 ஆகும்.
மேலும், அமைச்சின் செயலாளர் திரு.எம்.ஜு.கே.பெர்னாந்து 2018ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

**1.2 இடர் முகாமைத்துவ தேசிய சபையின் கூட்டங்கள் மற்றும் உரிய பணிகளிலான தேர்ச்சி**

2018.04.05 ஆம் திகதி இடம்பெற்ற இடர் முகாமைத்துவம் பற்றிய தேசிய சபையின் 13வது கூட்ட குறிப்பு 06இற்கு ஏற்ப நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகாரசபையினால் ஆற்று படுத்தப்பட்டுள்ள CAA/CP/MIWRDM மற்றும் 2018.07.06 ஆம் திகதிய கடிதத்தின் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளதன்படி 350ml, 500ml, 750ml, 1L, 1.5L மற்றும் 5L அளவிலான குடிநீர் போத்தல்களுக்கு கட்டுப்பாட்டு விலையினை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் இது தொடர்பில் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய அதிகார சபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இலங்கை தரப்படுத்தல் நிறுவனத்தினால் குடிநீர் போத்தல்களுக்காக வெளியிடப்பட்டுள்ள இலங்கை தரத்துக்கு அமைவாக அமையாத நீர் போத்தல்களை விற்பது தொடர்பில் வர்த்தகர்களுக்கு எதிராக குறிப்பிட்ட நீதவான் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டு ஏராளமான வழக்குகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், நுகர்வோருக்கு தரமான குடிநீர் போத்தல்களை கொள்வனவு செய்யக்கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நுகர்வோர் அலுவலகள் பற்றிய அபிவிருத்தி அதிகார சபையானது மாவட்ட தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும், பல்வேறுபட்ட அளவுகளைக் கொண்ட நீர் போத்தல்களுக்கான ஆகக் கூடிய விலை கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் வர்த்தமானி இதன் மூலம் குறிப்பிட்ட விலைகளை அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய அதிகார சபை அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட கூட்ட குறிப்பின் ஏழாவது விடயத்துக்கு ஏற்ப கடுவுள்ள வான் ஆறு பெருக்கெடுப்பது தற்போது சில வருடங்களாக இடம்பெறுவதாகவும் அதன் ஒரு தேர்ச்சியாக மொரகஹகந்த நீர்த்தேக்கத்தில் இருந்து அலஹர அணைக்கட்டின் ஊடாக மின்னேரிய, கவுடுள்ள, கிரிதலை மற்றும் கந்தளை நீர்த்தேக்கங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஆகக் கூடிய நீர் கொள்ளளவினைவிட அதிகமாக எடுத்துச் செல்கையில் யோதவாவி பெருக்கெடுப்பதினால் விவசாய நிலங்கள் மற்றும் சொத்துக்கள் நீரில் மூழ்குவதாகவும்

ஆகையால் யோதவாவியில் அலஹரவிலுருந்து தியபெதும வரையில் ஏராளமான இயற்கையை வாவிகள் சேர்வதனால் புனரமைப்பதன் மூலம் ஆற்றின் கொள்ளளவினை அதிகரித்தலை பிரயோக ரீதியாக மேற்கொள்ள முடியாது எனவும் பொலன்னறுவை நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தின் DI/PLN/W3/12 – 2017 மற்றும் 2018.08.08 ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது பற்றி அறிவித்து நீர்ப்பாசன திணைக்களத்தினால் DIAMIAM/PIDP (Gen) கடிதம் ஆற்றுப்படுத்த பட்டுள்ளது

இடர் முகாமைத்துவம் பற்றிய பொதுக்கூட்ட குறிப்பு இலக்கம் 09இற்கு ஏற்ப புத்தளம் மாவட்டத்தில் 08 பிரதேச செயலகப் பிரிவுகளில் கையினால் இயக்கப்படும் குழாய் கிணறுகளை புனரமைக்கும் நடவடிக்கைகளிலான தேர்ச்சி குறித்து புத்தளம் மாவட்ட செயலாளரது DSP/ADM.4/DEV.1/01/03/V மற்றும் 2018.09.14 ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக முன்வைக்கப்பட்டுள்ள புனரமைக்க உத்தேசித்துள்ள ஏனைய கையினால் இயக்கப்படும் குழாய் கிணறுகளை புனரமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**சட்டரீதியான அலுவல்கள்**

அமைச்சினால் தயார் செய்யப்பட்ட திருத்தச் சட்டமூலம் சட்ட வரைஞருக்கு ஆற்றுப் படுத்தப்பட்டுள்ளது. தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் சட்டம் சட்ட வரைஞரினால் தயார் செய்யப்பட்டு சட்டமா அதிபரின் அங்கீகாரம் கிடைத்தன் பின்னர் சட்ட மூலமானது அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்படவுள்ளது.

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சட்டரீதியான நடவடிக்கைகளாக, தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்புக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கிற்காக 2018ஆம் ஆண்டினுள் 12 தடவைகள் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஆஜராகி உள்ளது. ஏனைய நீதிமன்றங்களில் காணப்படும் வழக்கு தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தல் மற்றும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

**பொதுமக்கள் முறைப்பாடு**

அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கு சேவையினை எதிர்பார்த்து மக்கள் அவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பிலான முறைப்பாடுகளை முன்வைப்பதுடன், குறிப்பிட்ட முறைப்பாடுகளை அந்த நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தி, மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொள்வதுடன், 2018ஆம் ஆண்டினுள் 1206 முறைப்பாடுகள் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. குறிப்பிட்ட முறைப்பாடுகள் உரிய நிறுவன பிரிவுகளுக்கு ஆற்றுப் படுத்தப்பட்டுள்ளன.

- **அமைச்சரவை நிருபம் தொடர்பிலான நடவடிக்கைகள்**

2018ஆம் ஆண்டில் 24 அமைச்சரவை நிரூபங்கள், 02 அமைச்சரவைக் குறிப்புகள் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இதில் 18 அமைச்சரவை நிருபங்களும் 02 அமைச்சரவை குறிப்புகளுக்குமான தீர்மானங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

**உற்பத்தித் திறன் / முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்**

ஐம்பெரும் வண்ணக் கருத்துக்கு ஏற்ப அலுவலகங்களை முன்னெடுப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் விரிவுரை நடாத்தப்பட்டுள்ளதுடன், ஆவணங்கள் பட்டியல் படுத்தப்பட்டு சுவடிக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பிலான ஒரு நாள் பயிற்சி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**1.6 பயிற்சி வேலைத்திட்டம்**

**உள்நாடு**

அமைச்சின் உத்தியோகத்தர்களது இயலுமையை மேம்படுத்தும் நோக்கில் திறன் அபிவிருத்தி நிறுவனம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், பேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் போன்ற அரசாங்கத்தின் இணைந்த நிறுவனங்களில் நீண்டகால மற்றும் குறுங்கால பயிற்சி வேலைத்திட்டங்களில் 39 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

இவற்றுக்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டு நீர்ப்பாசன, நீர்வள மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் உள்ள நான்கு நிறுவனங்களின் ஊழியர்களது உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துதல், உத்தியோகத்தர்களுக்கு உளச்சோர்வு முகாமைத்துவம் பற்றிய பயிற்சியை வழங்கும் நோக்கிலும் குழு உணர்வினை மேம்படுத்தும் நோக்கிலும் கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் பற்றிய சர்வதேச பை நிறுவனத்தில் இடம்பெற்றது.

இரண்டாம் மொழி ( தமிழ்) IV வது மட்டத்திற்கு அரசு மொழிகள் திணைக்களத்தினால் 50 மணித்தியால பாடநெறிக்காக 14 பேர் ஈடுபடுத்தப்பட்டனர்.

**வெளிநாடு**

அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தியவாறு சர்வதேச மாநாடுகள், கூட்டங்கள், பயிற்சி அமர்வுகள் 26இல் 14 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள்.

## தேசிய பாதுகாப்பு தினத்தை கொண்டாடுதல்

அப/15/1975/715/001-1 ஆம் இலக்க மற்றும் 2016.01.07ஆந் திகதிய ” தேசிய பாதுகாப்பு தினத்தை கொண்டாடுதல்2015” எனும் தலைப்பிலான அமைச்சரவை நிரூபத்துக்கு அமைய வருடாந்த தேசிய பாதுகாப்பு தினம் கொண்டு படுவதுடன், இத்தடவையும் இது அமைச்சுக்கு உரித்தான 04 நிறுவனங்களுக்கு பங்களிப்புடன் நாடளாவிய ரீதியில் செலவுகளை குறைத்த வண்ணம் அனைத்து மத நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், அனர்த்தங்களை தணித்தல், அனர்த்த முன்னாயத்தம், அனர்த்தங்களின் போது பொதுமக்கள் நடந்து கொள்ள வேண்டிய விதம், அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய விதம், அனர்த்தங்களின் போது முகம் கொடுக்கவேண்டிய விதம் போன்ற துறைகள் குறித்து அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் மாவட்ட செயலகம் / பிரதேச செயலகம் வாரியாக முன்னெடுக்கப்பட்டது.

## 02. 02.திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

### 2.1 அபிவிருத்தி கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்

அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்ற தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடைகளையும் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்.∴ கருத்திட்டங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கமைய பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2018ஆம் வருடத்துக்காக தயார் செய்யப்பட்ட வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்கு ஏற்ப மாதாந்த 05 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் கௌரவ செயலாளரது தலைமையில் மேற்கொள்ளப்பட்டன. தவணை ரீதியில் 03 முன்னேற்ற மீளாய்வு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. இதன்போது இணைந்த நிறுவனங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கையில் தோன்றும் சிக்கல்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டதன் பின்னர், பின் ஆய்வுகளையும் மேற்கொள்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கும் முடிந்துள்ளது.

2.1.3 அரசாங்க வரவு செலவுக்கு ஏற்ப அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு ஏற்ப 2018ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயார் செய்யப்பட்டு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முன்னுரை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், 2019ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை

அறிக்கையும் தயார் செய்யப்பட்டு குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் துறைகளுக்கு ஆற்றுப்படுத்த பட்டுள்ளது.

2.1.4 2018ஆம் ஆண்டிற்காக தயார் செய்யப்பட்ட வருடாந்த செயலாற்றுகை திட்டத்திற்கு ஏற்ப அமைச்சு மற்றும் இணைந்த நான்கு நிறுவனங்கள் இணைந்து முன்னேற்றமானது தவணை ரீதியில் தயார் செய்யப்பட்டு அரச கணக்காய்வு திணைக்களத்துக்கு ஆற்றுப் படுத்தப்பட்டுள்ளது.

2.1.5 அரச கணக்கு சுற்றறிக்கை 402இன் 241இன் பிரகாரம் 2017ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயார் செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை 2018.05.25ஆந் திகதி நிலைபேறு அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவுக்கு ஆற்றுப் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பாராளுமன்ற சபை முதல்வர் அலுவலகம் அறிவித்துள்ளது.

- அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்டுள்ள அனைத்து கருத்திட்டங்களினதும் முன்னேற்றத்தை உள்ளடக்கியதாக தயார் செய்யப்பட்ட முன்னேற்றமானது நான்காவது தவணை வரையில் ஜனாதிபதி செயலகத்துக்கு ஆற்றுப்படுத்த என்னதுப்பட்டுள்ளது. மேலும், இந்த முன்னேற்ற அறிக்கையானது கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் வருடாந்தம் கூறப்படும் அமைச்சின் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை உள்ளடக்கிய அறிக்கையும் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- ஜனாதிபதி செயலணி வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்தி பிரிவிடமிருந்து கோரப்பட்டிருந்த 2015-2018ஆம் ஆண்டுகளில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.

- 2019ஆம் ஆண்டடில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள கருத்திட்ட பிரேரணைகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு அனுமதியைப் பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஒரு கருத்திட்ட பிரேரணையும், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 07 கருத்திட்ட பிரேரணைகளும், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் ஒரு கருத்திட்ட பிரேரணையும், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்தின் 10 கருத்திட்டங்களும் ( 03 கருத்திட்டங்கள், வெளிநாட்டு கருத்திட்டங்கள்) முன்வைக்கப்பட்டுள்ளன.

- 2018 - 2021இற்கான அரசு முதலீட்டு வேலைத்திட்டம் தயார் செய்யப்பட்டு, தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்த பட்டுள்ளது.

- 2016 ஏப்பிறல் மாதம் 22ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்புடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையானது உலக காலநிலை மாற்றங்களை தணிப்பதற்கான தலைமைத்துவத்தை வழங்குவதன் கீழ் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் உபாய வழி முறை கொள்கைகள் மற்றும் முன்னெடுப்பு திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்று தயார் செய்யப்பட்டதுடன், இது அமைச்சினால் நட்டம் மற்றும் பாதிப்பு (Loss and Damages) பிரிவின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட, தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்ட 5 பங்களிப்புகளை அடையாளம் கண்டு, அதற்கான செயலாற்றுகை திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கேற்ப, குறிப்பிட்ட பங்காளி நிறுவனங்களை உள்ளடக்கிய திட்டமிடல் மற்றும் கருமமாற்றல் குழுக் கூட்டங்கள் சில இடம்பெற்றன.2000 முதல் 2015 வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற 64 எல்லை காலநிலை நிலைமைகள் தொடர்பிலான நட்டம் மற்றும் பாதிப்பு பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. செயலாற்றுகை திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் குறிப்பிட்ட நிறுவனங்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 2.2. 2.2 செந்தாய் சட்டகம் 2015-2030

காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படும் இயற்கை அனர்த்தங்களான அதிகரிப்பின் போக்கினை அண்மைக்காலமாக காணக்கூடியதாக உள்ளதுடன், அதனால் ஏற்படும் பாதிப்புகளும் அளப்பரியன. இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அனர்த்த முகாமைத்துவத்தை பலப்படுத்துவதற்கான பல்வேறுபட்ட உபாய வழி முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், இதற்கான வேலைய மற்றும் உலக சமவாயங்கள் இதில் முக்கியத்துவம் பெறுகின்றன.2005-2015 காலகட்டத்திற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஹியுகோ செயற்பாட்டுத் திட்டம் (HFA ) 4 முக்கிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டதுடன், அங்கத்துவ நாடாக இலங்கையையும் இதில் முக்கிய பங்களிப்புச் செலுத்தியுள்ளது.

ஹியுகோ செயற்பாட்டுப் செயற்பாட்டுத் திட்டத்தில அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் கற்றறிந்த பாடங்களைக் கற்றுக்கொண்டு அனர்த்த அபாய முகாமைத்துவம் மீது கவனம் செலுத்தப்பட்டது. இதற்கேற்ப 2015-2030 காலகட்டத்துக்காக ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான செந்தாய் சட்டகமானது Sendai Frame work for Disaster Risk Reduction – SFDRR) நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த சட்டகமானது நான்கு முக்கியத்துவங்களின் கீழ் 7 இலக்குகள் மற்றும் அதன் சிறப்பினை அளவீடு செய்வதற்கான 32 தீர்மான காரணிகளை உள்ளடக்கிய சர்வதேச சமவாயமாக காணப்படுகிறது.

இந்த செயற்பாட்டு சட்டகத்தை நடைமுறைப்படுத்துகையில் இலங்கையின் கேந்திர நிறுவனமாக (Focal Point) பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு பெயரிடப்பட்டுள்ளது. தற்போது தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பங்காளி நிறுவனங்கள் மற்றும் அந்த நிறுவனங்களின் முகவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக, இந்த செயற்பாட்டுத் திட்டத்தை முன்னெடுக்கும் UNISDR நிறுவனத்துக்கு தேவையான அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் கருமமாற்றல் முறைமைக்கு(Monitoring System) தேவையான 2015.'.2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் அனர்த்தம் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இற்றைப்படுத்தப்பட்டதுடன், குறிப்பிட்ட வருடங்களில் ஏற்பட்ட நத்தம் மற்றும் பாதிப்பு தொடர்பிலான தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.

## 2.3 புள்ளிவிபரவியல் பிரிவு




## 2.3 புள்ளிவிபரவியல் பிரிவு

இந்த அமைச்சினால் குடித்தொகை புள்ளிவிபரவியல் திணைக்களத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஏற்ப, 2018ஆம் ஆண்டு முதல் புள்ளிவிபரவியல் உத்தியோகத்தரொருவர் இந்த அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ளார். இதற்கேற்ப இந்த பிரிவினால் அமைச்சின் அன்றாட நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான உத்தியோகபூர்வ

புள்ளிவிபரங்கள் ( ஆரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் மற்றும் விபரங்கள்) வழங்கப்படுவதுடன், அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான செந்தாய் சட்டகம், நிலையான அபிவிருத்தி சுட்டிகள் மற்றும் ஏனைய சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் உடன்பாடுகளின் தேர்ச்சியை அறிக்கை இடுவதற்குத் தேவையான தரவுகளை வழங்குதல் மற்றும் செந்தாய் தரவு முறைமையைஇற்றைப்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அனர்த்த தணிப்புக்கான செந்தாய் சட்டகத்தின் இணையத்தின் வழியாக தரவுககளை உள்ளடக்கும் முறைமையின் புகைப்படம்

## திடீர் முன்னாயத்தம் பற்றிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு - உலக உணவு வேலைத்திட்டம்

2016 ஒக்டோபர் மாதம் கைச்சாத்திடப்பட்ட விரைவான ஒப்பந்தத்தின் கீழ் நீர்ப்பாசன நீர்வள மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகளின் உலக உணவு திட்டம் ஆகியன இணைந்து 2018ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தை தயார் செய்ததுடன், இது சிறப்பாக முன்னெடுக்கப்படுகிறது. செயற்பாட்டு திட்டமானது, தேசிய அவசர கருமமாற்றல் திட்டத்தை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்ப உதவி நல்குதல், நிவாரண உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல், நேரடி தரவு அவதானிப்பு முறைமையை மேம்படுத்துதல் மற்றும் பாதிப்புக்கு உட்படக்கூடிய மற்றும் பாதிப்பினை புரிந்து கொள்வதற்கான ஒத்துழைப்பு நல்கலை நோக்காகக் கொண்டுள்ளது.

தற்போது அவசர திட்டமிடல் கர்மம் ஆற்றலுக்கு ஏற்ப இந்த அமைச்சுக்கு பங்களிப்பு நல்கும் பிரதான தரப்பாக உலக உணவு வேலைத்திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த கருத்திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதுடன், இதற்காக சிரேஸ்ட அவசர உத்தியோகத்தர் மற்றும் அனர்த்த பதிலிருப்பு நிபுணத்துவரொருவர் அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ளார்.

வேலைத் திட்டத்தின் மூலம் அவசர கருமமாற்றல் திட்டமிடல் குழுவொன்று தாபிக்கப்பட்டு ஆலோசனை மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், தேசிய முகாமைத்துவ செயன் முறையொன்றினை தேசிய அவசர கருமமாற்றல் முறைமைக்குள் உள்ளீர்த்து, தேசிய அவசர கருமமாற்றல் திட்டத்தை முன்னெடுப்பதற்கான மேலதிக கருவிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. தற்போது திருத்தப்பட்ட அவசர கருமமாற்றல் திட்டத்தின் நடவடிக்கைகள் இறுதித் தருவாயில் உள்ளது, ஏற்றுக்கொள்ளப்பட்ட தருமமாற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துதல், திட்டமிடுதல் மற்றும் திட்டங்களை பரிசீலிப்பதற்கான ஒத்திகை நிகழ்வு 2019 முதலாவது தவணையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட துரிதமான இழப்பு மதிப்பீட்டுக் கருவி அறிமுகம் செய்யப்பட்டு, 2017 பெருவெள்ள அனர்த்த நிலைமைகளின் கீழ்

பரிசீலனை செய்யப்பட்டு கள ஊர்ஜிதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இது அனர்த்த நிலைமைகளின் போதான இழப்புகளை மதிப்பீடு செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய முக்கியமான ஒரு கருவியாகும். நிலவுகின்ற வறட்சியான காலநிலையுடன் அமைச்சானது வறட்சி இழப்புகளை மதிப்பீடு செய்வதற்காக உலக உணவு அமைப்பின் உதவிகளை கோரியதுடன், வறட்சி இழப்பு மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. நேரடி தரவு அவதானிப்பு முறைமை கருமமாற்றல் நிலையம் மேம்படுத்தப்பட்டு தாபிக்கப்பட்டுள்ளதுடன், அனர்த்தம் நிகழும் இடத்திலிருந்து கூட்டிணைந்த தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக வளிமண்டலவியல் திணைக்களத்துடன் இணைந்து மேம்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தீர்மானம் எடுக்கும் செயன்முறையை மிகச் சிறப்பாக ஒருங்கிணைப்பதற்காக அமைச்சின் தலைமையில் தொழில்நுட்ப குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

நிச்சயமற்றதன்மை மீதான திட்டமிடலை தேசிய நிவாரண சேவை நிலையத்துக்கு அறிமுகப்படுத்தி, அதன் மூன்றாவது கட்டமாக 2018 வடகிழக்கு பருவப்பெயர்ச்சி மழையினை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டது. உலக உணவு அமைப்பின் தொழில்நுட்பவியலாளர்கள் தேசிய நிவாரண சேவைகள் நிலையத்துடன் இணைந்து 17 மாவட்டங்களில் நிவாரண சேவை உத்தியோகத்தர்களுக்கான 6 செயலமர்வுகளை நடாத்தியுள்ளனர்.

## தகவல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையில் நிலையான அபிவிருத்தி நீரோட்டத்தில் உலக சுற்றாடல் மற்றும் அனர்த்த அபாய முகாமைத்துவ உடன்பாடுகளை உள்ளீர்க்கும் கருத்திட்டம்

தகவல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையில் நிலையான அபிவிருத்தி இதன்போதுநீரோட்டத்தில் உலக சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ உடன்பாடுகளை உள்ளிருக்கும் கருத்திட்டமானது 2017ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதன்போது 98மூ அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தரவுகள் பற்றிய விபரங்களை (Meta data) உள்ளடக்கியவாறு தயார் செய்யப்பட்ட இணையத்தளத்தை அமைச்சுக்கு பொறுப்பளித்தல் மற்றும் தரவுகளை உள்ளடக்குதல் தொடர்பில் அடையாளம் காணப்பட்ட பங்காளி நிறுவனங்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டு முதலாவது தவணையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

அனர்த்தம் மற்றும் சுற்றாடல் தரப்புகளை, தீர்மானம் எடுக்கும் விடயத்தில் பயன்படுத்துவதிலான முக்கியத்துவம் தொடர்பில் கம்பஹ மற்றும் பதுளை மாவட்ட பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள், அரசியல் அதிகாரசபைகள், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்ட தொடர் நிகழ்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.



அறிவுறுத்தல் வேலைத்திட்ட நிகழ்ச்சித் தொடரை ஆரம்பித்தல்



பதுள்ளை வெலிமடை மக்களுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம்



ஹப்புத்தளை பிரதேச அறிக்கையாளர்களுக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

குறிப்பிட்ட விழிப்புணர்வுட்டும் வேலைத்திட்டங்கள் மிகச் சிறப்பாக அமைந்ததுடன், இதில் தரவு மற்றும் விபர மூலாதாரங்கள் காணப்படும் நிறுவனங்கள் குறித்து அதிகமாக விசாரிக்கப்பட்டதுடன், இதற்காக தரவுகள் மற்றும் விபரங்களை முன்னெடுக்கும் நிறுவனங்கள் பற்றிய பழங்களை உள்ளடக்கியவாறு இணையத்தின் ஊடாக அணுகக்கூடிய தரவு பற்றிய தரவுக் களஞ்சியமொன்று ஏற்படுத்தப்பட்டது. .(Meta data portal).

பதுளை மாவட்டத்தில் அரசர் நிறுவனங்களுக்கிடையில் தரவுகளை பரிமாறுகையில்.˙. தரவுகளை பயன்படுத்துகையில் ஏற்படும் சிக்கல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இச் சிக்கல்களை தீர்ப்பதற்குத் தேவையான விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

விபரங்கள் பற்றிய தரவுகளை உள்ளடக்கியவாறு தயார் செய்யப்படுகின்ற இணையத்தளத்தை ( தரவுக் களஞ்சியம்) .(Meta data portal) இற்றைப்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட பங்காளி நிறுவனங்களுக்கு தேவையான கணினி மற்றும் ஏனைய கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டு 33 நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

பதுள்ளை, இரத்தினபுரி, கம்பஹ மற்றும் மாத்தளை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட அப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான கேள்வி பதில் வடிவிலான வேலைத்திட்டங்கள்

கல்வி அமைச்சுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டதுடன், இதன் மாவட்ட மட்டத்திலான போட்டிகள் 2018 செப்டெம்பர் மாதம் 15ஆந் திகதி நடத்தப்பட்டன. மாவட்ட வெற்றியாளர்களுடன் இறுதிப் போட்டியானது ஒக்டோபர் மாதம் 06ஆந் திகதி இந்த அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டதுடன், பதுளை மத்திய மகா வித்தியாலயம் வெற்றியை தமதாக்கிக் கொண்டது. இதன் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு தாம் கல்வி கற்கும் சூழலுடன் ஒத்து வாழ்கையில், அச்சூழலை பாதுகாப்பதிலான முக்கியத்துவம் மற்றும் இதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை முன்கூட்டியே தெரிந்து கொள்ளும் இயலுமையை மேம்படுத்துவது நோக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.

இக்கருத்திற்றத்தின் கீழ் சுற்றாடல் மற்றும் அனர்த்தம் பற்றிய தரவுகளைப் பயன்படுத்தி பயிற்சி பாடநெறிகளை முன்னெடுப்பதில் உதவிகளைப் பெறுவதற்காக 04 பயிற்சி மொடியூல்கள் (Training Modules) தயார் செய்யப்பட்டன.

கம்பஹா மாவட்ட திட்டமிடல் உத்தியோகத்தர்களும் உள்ளடங்கியதாக குற்றம் விபரங்களை தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பயன்படுத்துவதிலான முக்கியத்துவம் குறித்து அரசாங்க உத்தியோகத்தர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட தரவு பற்றிய தேசிய வேலைத்திட்டத்தில (National Data forum) இந்த அமைச்சும் பங்களிப்பு நல்கியதுடன், சுற்றாடல் மற்றும் அனர்த்த தரவுகள் சரியான தீர்மானம் எடுக்கும் செயல்பாட்டில் ஆற்றுகின்ற பங்களிப்பு தொடர்பில் கூட்டத் தொடரொன்றும் நடாத்தப்பட்டுள்ளது.





பாடசாலை கேள்வி பதில் வடிவிலான வேலைத்திட்டத்தின் முக்கிய சந்தர்ப்பங்கள்.

## 03. நிதி நடவடிக்கைகள்

- **நிதித் தேர்ச்சி**

| நிறுவனம் | 2018 வருடத்தில் நிதிச் செலவுகளுக்காக ஒதுக்கிய பணத்தொகை | 2018 டிசெம்பர் 31 வரையிலான நிதிச் செலவு | நிதிச் செலவுகளிலான் வினைத்திறன் | 2018ஆம் ஆண்டு மீண்டெழும் செலவுகளுக்காக ஒதுக்கிய நிதித்தொகை | 2018 டிசெம்பர் 31 வரையிலான மீண்டெழும் செலவு | மீண்டெழும் செலவுகளின் வினைத்திறன் |
|---|---|---|---|---|---|---|
| அமைச்சரவை அலுவலகம் | 8,400,000.00 | 6,357,687.94 | 75.69 | 51,950,000.00 | 39,166,907.08 | 75.39 |
| நிருவாக மற்றும் நிறுவனரீதியான சேவைகள் | 547,400,000.00 | 508,209,194.54 | 92.84 | 89,000,000.00 | 78,268,340.04 | 87.94 |
| **மொத்தம்** | 555,800,000.00 | 514,566,882.48 | 92.58 | 140,950,000.00 | 117,435,247.12 | 83.32 |

- செலவுத் தலைப்பு - 2018

| | அமைச்சரவை அலுவலகம் 106-01-01 | | நிருவாக மற்றும் நிறுவன சேவைகள் 106-01-02 | |
|---|---|---|---|---|
| | நிதி | மீண்டெழும் | நிதி | மீண்டெழும் |
| மதிப்பீட்டு நிதி ஏற்பாடு | 8,400,000.00 | 50,400,000.00 | 547,400,000.00 | 90,850,000.00 |
| நி.பி.66இன் கீழான மாற்றல்கள் மற்றும் குறைநிரப்பி நிதி ஏற்பாடுகள் | 0.00 | 1,550,000.00 | 0.00 | 1,850,000.00 |
| தேறிய நிதி ஏற்பாடு | 8,400,000.00 | 51,950,000.00 | 547,400,000.00 | 89,000,000.00 |
| செலவு | 6,357,687.94 | 39,166,907.08 | 508,209,194.54 | 78,268,340.04 |
| செலவு வீதம் | 75.69 | 75.39 | 92.84 | 87.94 |

**அரசாங்க உத்தியோகத்தர்களது முற்பணக் கணக்குகள**

| | ஆகக்கூடிய செலவு எல்லை | கிடைப்பனவின் ஆகக்குறைந்த எல்லை | ஆகக்கூடிய பற்று மீதி எல்லை |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள எல்லை | 20,000,000.00 | 3,000,000.00 | 42,000,000.00 |
| 2018.12.31 ஆந் திகதியிலான மெய்ப் பெறுமதி | 14,236,662.00 | 10,063,969.37 | 31,391,627.84 |

- **2018.12.31 ஆந் திகதியிலான கடன் ∴ முற்பணம்**

| கடன் வகை | கடன் அளவு | கடன் பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பெருநாள் முற்கொடுப்பனவு | 1,930,000.00 | 193 |
| அனர்த்த கடன் | 12,228,662.00 | 87 |
| விசேட முற்பணம் | 68,000.00 | 17 |
| **மொத்தம்** | **14,226,662.00** | **297** |

- **2018 ஆம் வருடத்தில் அமைச்சின் பெறுகை செலவுகள் பற்றிய விபரம்**

| | அமைச்சரவை அலுவலகம் | | நிருவாக மற்றும் நிறுவன சேவைகள் | |
|---|---|---|---|---|
| | நிதி ஏற்பாடு | செலவு | நிதி ஏற்பாடு | செலவு |
| **மூலதனம்** | | | | |
| 2102 - மனைப்பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கையகப்படுத்தல் | 2,000,000.00 | 1,996,904.60 | 1,000,000.00 | 869,155.55 |
| 2103- இயந்திரங்கள் மற்றும் கருவிகளை கையகப்படுத்தல் | 2,000,000.00 | 778,600.00 | 1,800,000.00 | 1,776,570.00 |
| மொத்தம் | 4,000,000.00 | 2,775,504.60 | 2,800,000.00 | 2,645,725.55 |
| நிதித் தேர்ச்சி | **69.39** | | **94.49** | |
| **மீண்டெழும்** | அமைச்சரவை அலுவலகம் | | நிருவாக மற்றும் நிறுவன சேவைகள் | |
| 1201- காகிதாகிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 1,600,000.00 | 1,145,696.50 | 1,400,000.00 | 1,375,793.25 |
| மொத்தம் | 1,600,000.00 | 1,145,696.50 | 1,400,000.00 | 1,375,793.25 |
| நிதித் தேர்ச்சி | **71.61** | | **98.27** | |

**4. உள்ளக கணக்காய்வு பிரிவு**
**4.1 உள்ளக கணக்காய்வு பிரிவின் நோக்கங்கள் மற்றும் செயற்பணிகள்**

**நோக்கங்கள்**
அமைச்சு மற்றும் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களினால் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தாபிக்கப்பட்டுள்ள உள்ளக நிர்வாக முறைமையினால் தவறுகள் மோசடிகளை தவிர்ப்பதற்காகவும் வெளிப்படுத்துவதற்காகவும் உள்ளக பரிசீலனைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் மற்றும் சுயாதீன மதிப்பீடொன்றை முன்னெடுத்தல்

அமைச்சு மற்றும் அமைச்சுடன் இணைந்து நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அல்லது அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் உத்தேச திட்டங்களை நடைமுறைப்படுத்தும் சட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அடைந்துள்ள தேர்ச்சியை நிச்சய படுத்துவதற்கு முன்னேற்ற ஆராய்ச்சி நடவடிக்கைகளில் அமைச்சின் செயலாளருக்கு ஒத்துழைப்பு நல்குதல்.

பொருத்தமான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் அமைச்சின் செயலாளருக்கு இடையில் ஒருங்கிணைப்பாளராக செயற்படுதல்.

**விடயப்பொறுப்பு**

தவறுகள் மற்றும் மோசடிகளை தடுப்பதற்காக நிறுவனத்தினுள் முன்னெடுக்கப்படுகின்ற உள்ளக தேடுதல் மற்றும் கட்டுப்பாட்டு முறையானது திட்டமிடுதலைப் போன்றே நடைமுறைப்படுத்துவதிலும் சிறப்பாக அமைந்துள்ளதாஎன ஆராய்ந்து பார்த்தல்.

கணக்கு மற்றும் மேனி அறிக்கைகளின் நம்பிக்கையினை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் கணக்கீட்டு நடைமுறைகள் மூலம் சரியான நிதிக்கூற்றுக்களை தயார் செய்வதற்கு தேவையான தரவுகள் கிடைக்கப்பெறுகின்றனவாஎன ஆராய்ந்து பார்த்தல்

பணியாட் குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அவர்களது வினைத்திறனிலான தரத்தினை மதிப்பீடு செய்தல்.

நிறுவனத்தின் சொத்துக்கள், எவ்வளவு தூரம் அனைத்து விதமான சேதங்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்தல்.

தாபனக் கோவையின் நிதிப் பிரமாணங்கள், பொது நிருவாக சுற்றறிக்கை மற்றும் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் ஆலோசனைகள் பின்பற்றப்பட்டுள்ளதாஎன ஆராய்தல்.

வீண் விரயம் ஊழல் மற்றும் எல்லையை மீறிச் செல்லும் செலவுகளை தடுப்பதற்கும் வெளிப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்படும் உள்ளக நிர்வாக முறையின் சாதகத் தன்மையை ஆராய்தல்

நிறுவனத்தின் கணக்கு நடைமுறை, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பாதுகாப்பாகவும் கவனமாகவும் முறையாகவும் பயன்படுத்தப்படுகின்றதா என்பதை ஆராய்தல்.
தேவையான சந்தர்ப்பங்களில் விேட விசாரணைகளை நடாத்துதல்.

## 4.2 கணக்காய்வு பரிசீலனையும் மற்றும் விே'ட விசாரணைகளிலான முன்னேற்றம் -2018

| தொடர் இலக்கம் | விபரம் | முன்வைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 01 | பற்றுச்சீட்டு பரிசீலனை - 2017 | 2018.01.11 |
| 02 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு கருமமாற்றல் மற்றும் குத்தனை முறையில் இரண்டு மோட்டார் வாகனங்களை பெற்றுக்கொள்ளுதல். | 2018.01.26 |
| 03 | | 2018.01.26 |
| 04 | மனித நுகர்வுக்கு உகந்ததல்லாத அரிசியை பெறுகை குழுவின் தீர்மானத்துக்கு ஏற்ப விற்பனை செய்தல் தொடர்பான பரிசீலனை 2018.01.22 | 2018.01.29 |
| 05 | 2018ஆம் வருடத்துக்கான ஆரம்ப அறிக்கை | 2018.02.07 |
| 06 | அவசர நிவாரணப் பொருட்கள் மற்றும் பண்டங்களின் கொள்வனவு -2017 | 2018.03.05 |
| 07 | தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்துக்கு நீர்த் தாங்கிகளை கொள்வனவு செய்தல். | 2018.02.15 |
| 08 | தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்துக்கு டிரெக்டர் மற்றும் நீர் பவுசர்களைக் கொள்வனவு செய்தல். | 2018.04.24 |
| 09 | | 2018.05.03 |
| 10 | பற்றுச்சீட்டுக்களின் பரிசீலனை 2018 ( ஜனவரி மாதம்) | 2018.05.09 |
| 11 | தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின வாகனங்களை பரிசீலித்தல் | 2018.05.28 |
| 12 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் இணையத்தளம் பற்றிய கணக்காய்வு | 2018.07.02 |
| 13 | வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை பரிசீலித்தல் - 2017 | 2018.07.04 |
| 14 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2018 வருடத்துக்கான செயலாற்றுகை திட்டத்துக்கு ஏற்ப 2018ஆம் ஆண்டின் முதலாவது தவணையிலான | 2018.07.25 |

| | | |
|---|---|---|
| | முன்னேற்றத்தை பரிசீலித்தல்.<br><br>அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு 100 வள்ளங்கலை கையளித்தல்.<br><br>22017ஆம் ஆண்டுக்கான பொருள் மற்றும் களஞ்சியசாலை மதிப்பீட்டு அறிக்கைகளை பரிசீலித்தல். | |
| 15 | பொதுநிருவாகச் சுற்றறிக்கை 14/2005 இன் 01வது இணைப்புக்கு ஏற்ப, ஆவணக்கோப்புகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை பரிசீலித்தல். | 2018.09.03 |
| 16 | அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் பெறுகை நடவடிக்கைகளை கணக்காய்வு செய்தல். | 2018.09.07 |
| 17 | 2018.09.12 ஆந் திகதி அமைச்சரவையின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் கூட்டத்தில், செயலாளரது ஆலோசனையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் தொடர்பிலான அறிக்கையிடல் மற்றும் பொறுப்புக்கூறவேண்டியவர்களை தீர்மானித்தல் பற்றிய விசேட கணக்காய்வு பரிசீலனை. | 2018.09.27 |
| 18 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தணிப்பு ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி பிரிவின் 2018.08.31 ஆந் திகதியிலான முன்னேற்றத்தை பரிசீலித்தல் | 2018.09.27 |
| 19 | அமைச்சின் வாகனங்களை கணக்காய்வு செய்தல் | 2018.11.07 |
| 20 | அமைச்சின் கீழ் மாடி, கீழ்மாடியின் வாகன தரிப்பிடம் மற்றும் ஆவணக்கூடத்தை பரிசீலித்தல். | 2018.11.09 |
| 21 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின 2017ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு பயிற்சிகளுக்கு உத்தியோகத்தர்களை அனுப்புதல் பற்றிய ஆவணக்கோவையை பரிசீலித்தல். | 2018.11.26 |
| 22 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 அவசர அழைப்புக் கூடத்துக்கான புதிய மென்பொருளை தாபித்தல் பற்றிய விசேட பரிசீலனை | 2018.10.22 |

**4.3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் பற்றிய தேர்ச்சி - 2018**

| **தொடர் இலக்கம்** | **விபரம்** | **முன்வைக்கப்பட்ட திகதி** |
|---|---|---|
| 01 | 2017 நான்காவது தவணை | 2018.03.09 |
| 02 | 2018 முதலாவது தவணை | |
| 03 | 2018 இரண்டாவது தவணை | 2018.06.21 |
| | 2018 மூன்றாவது தவணை | |
| 04 | | 2018.10.11 |
| | | 2018.12.20 |

**4.4 அரசாங்க கணக்காய்வு துறையிலிருந்து கிடைக்கப்பெற்ற கணக்காய்வு மதிப்பீடுகளுக்கான பதில் வழங்குதல்-2018**

அமைச்சின் 20 கணக்காய்வு மதிப்பீடுகள், வளிமண்டலவியல் திணைக்களத்தின் 05 மதிப்பீடுகள், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின்17 மதிப்பீடுகள் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் மதிப்பீடுகளுக்கான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.

# தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம

# பகுதி 11

# தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்

**அறிமுகம்**

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையமானது 1996ஆம் ஆண்டு சமூக சேவைகள் மற்றும் சமூக நலனோம்புகை அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது. நிவாரணங்கள், புனர்வாழ்வளிப்பு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை திட்டமிடுவதற்காகவும் நடைமுறைப்படுத்துவதற்காகவும் 2015.12.08ஆந் திகதி 1422/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. 2007.01.09 ஆம் திகதி 1482/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் இது தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் எனப் பெயரிடப்பட்டு, மீள்குடியமர்த்தல் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சுக்கு கையளிக்கப்பட்டது. 1651/220 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2010.04.30 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையமானது, கொழும்பு 07, விந்யா மாவத்தையில் அமைந்துள்ளதுடன், அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அமைச்சர் மற்றும் செயலாளரினால் வழங்கப்படும் கொள்கை வழிகாட்டல்களின் கீழ் இயங்குகின்றது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்படும் கொள்கை வழிகாட்டலின் பிரகாரம் குறிப்பிட்ட மாவட்ட அலுவலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் வழியாக உரிய கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், மாவட்ட செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் அபிவிருத்தி உதவியாளர் ( அனர்த்த முகாமைத்துவம்), அபிவிருத்தி உத்தியோகத்தர் ( அனர்த்த நிவாரண சேவைகள்) உத்தியோகத்தர்கள் அனர்த்த ஒருங்கிணைப்பாளர்களாக செயற்படுகின்றார்கள்

**நோக்கு**

அனர்த்தத்துக்குப் பின்னரான சிறப்பான அனர்த்த நிவாரண சேவைகள் ஊடாக மிகவும் பாதுகாப்பான இலங்கையை நோக்கிப் பயணித்தல்

**பணி**

இயற்கையினாலும் மனிதனாலும் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களினால் விளையும் தீங்குபயக்கும் தாக்கங்களுக்கு பதிலிருத்தல் மற்றும் இற்றைப்படுத்தல் மூலம் மனித உயிர்கள், சொத்துக்கள் மற்றும் மக்கள் வாழ்வைப் பாதுகாத்தல்.

## நோக்கம்

சமூகம் சுற்றாடல் மற்றும் பொருளாதாரத்துக்கு அனர்த்தங்களினால் ஏற்படுத்தப்படும் தீங்குபயக்கும் தாக்கங்களை குறைத்தல் மற்றும் அனர்த்த நிவாரணங்களை வழங்குவதற்கான தேசிய கொள்ளளவுகளை பலப்படுத்துவதன் மூலம் நிலையான அபிவிருத்திக்கான தேசிய நோக்கத்துக்கு பங்களிப்பு நல்குதல்.

## செயற்பணிகள்

- அனர்த்தங்களின்போது பாதிக்கப்படும் தரப்பினருக்கான துரித நிவாரணங்களை வழங்குவதற்கான வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயார் செய்தலும் நடைமுறைப்படுத்துதலும்.
- உயர் அனர்த்த அபாய பிரதேசங்களில் வாழும் மக்களை மீள்குடியமர்த்துவதற்காக அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்கக்கூடிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குதல், வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை.
- தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதிக் காப்பீட்டுத் திட்டத்தை செயற்படுத்துதல்.
- உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் நன்கொடைகளை முகாமைத்துவம் செய்தல்
- அனர்த்தத்துக்குப் பின்னரான நிலமைகளுக்கு முகம்கொடுப்பதற்காக சமூகம் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.
- அனர்த்தத்துக்குப் பின்னரான செயற்பாடுகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களை நடாத்துதல்
- வெளிநாட்டு நன்கொடைக் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- அனர்த்த நிவாரண சேவைகள் முன்ஆயத்தம் மற்றும் பதிலிருப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

## தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2018.12.31ஆந் திகதிக்கான பணியாட்குழுவினர்

| தொடர் இலக்கம் | பதவி | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பணியாட்குழுவினர் | மெய் பணியாட்குழுவினர் | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் | இ.நி.சே. | 01 | 01 | - |
| 02 | பிரதி பணிப்பாளர் | இ.நி.சே | 01 | - | 01 |
| 03 | உதவிப் பணிப்பாளர் | இ.நி.சே | 06 | 04 | 02 |
| 04 | கணக்காளர் | இ.க.சே. | 01 | - | 01 |
| 05 | நிருவாக உத்தியோகத்தர் | அ.மு.உ.சே. | 01 | - | 01 |
| 06 | அபிவிருத்தி உதவியாளர் / (அனர்த்த முகாமைத்துவம் / அனர்த்த நிவாரண சேவை) | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை | 368 | 349 | 19 |
| 07 | அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே. | 08 | 06 | 02 |
| 08 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் ( வகுப்பு II ) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவை | 02 | - | 02 |
| 09 | கருத்திட்ட உத்தியோகத்தர் | - | 01 | - | 01 |
| 10 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் ( வகுப்பு III ) (தரவு குறிப்பு இயக்குநர் ) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவை | 01 | - | 01 |
| 11 | சாரதி | சாரதி சேவை | 07 | 06 | 01 |
| 12 | அலுவலக ஊழியர் | அ.உ.சே. | 04 | 03 | 01 |
| 13 | லொறி நடத்துநர் | - | 05 | 01 | 04 |
| மொத்தம் | | | 406 | **370** | **36** |

## தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2018.12.31ஆந் திகதிக்கான நிதித் தேர்ச்சி

106 - அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் 2 - அபிவிருத்தி வேலைத்திட்டம் 4 -அனர்த்த நிவாரண கருமமாற்றல்

| | RECURRENT VOTES | Total Allocation | Expenditure (NDRSC Head oofice) | Released Allocattion to the District Secretariat | Expenditure as at 31-12-2018 | Progress % |
|---|---|---|---|---|---|---|
| **106-2-4-1-1501** | **Welfare Programmes-Flood & Drought Relief** | **5,755,690,000.00** | **61,612,971.17** | **5,674,682,223.98** | **5,647,578,238.00** | **98.12** |
| 106-2-4-7-1508 | Compensation Payment for Salawa & Kegalle | 5,373,886,000.00 | 19,548,635.81 | 5,335,545,524.99 | 5,278,532,331.97 | 98.23 |
| 106-2-4-8-1508 | Rent Allowance For Flood Victims | 3,600,000.00 | - | 3,600,000.00 | 3,587,100.00 | 99.64 |
| 106-2-4-9-1501 | Compensation Payment to the Victims of Meethotamulla Incident | 33,304,000.00 | - | 33,304,000.00 | 29,253,500.00 | 87.84 |
